www.Padasalai.Net www.CBSEtips.in

V12T

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்
காலாண்டுப் பொதுத் தேர்வு - செப்டம்பர் 2022

வகுப்பு 12

தமிழ்

கால அளவு : 3.00 மணி நேரம் + 15 நிமி. மதிப்பெண்கள் : 90

பகுதி - I

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.** 14 x 1 = 14

1. "மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
தன்னேர் இலாத தமிழ்" - இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடை நயம்
அ) அடிமோனை, அடி எதுகை ஆ) சீர் மோனை, சீர் எதுகை
இ) அடி எதுகை, சீர் மோனை ஈ) சீர் எதுகை, அடி மோனை
2. சிற்பி பாலசுப்பிரமணியத்தின் 'இளந்தமிழே' பாடல் இடம் பெற்ற நூல்
அ) மஸ்னவி ஆ) காவியதர்சம் இ) நிலவுப்பூ ஈ) துறைமுகம்
3. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்
அ) மணல் அள்ளுதல் ஆ) பருவநிலை மாற்றம்
இ) நிலத்தடி நீர் உறிஞ்சப்படுதல் ஈ) பாறைகள் இல்லாமை
4. உலக நாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே புவி வெப்பமயமாதலை கட்டுப்படுத்த முடியும். - இத்தொடர் உணர்த்துவது
அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது.
ஆ) பசுமைக்குடில் வாயுக்கள் அதிகமாகிறது.
இ) காலநிலை மாறுபடுகிறது ஈ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது
5. "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே"
- இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல் ______.
அ) நன்னூல் ஆ) தொல்காப்பியம் இ) அகத்தியம் ஈ) இலக்கண விளக்கம்
6. "உவா உற வந்து கூடும்
உடுபதி, இரவி ஒத்தார்" - யார் யார்?
அ) இராமன், சவரி ஆ) இராமன், சுக்ரீவன் இ) இராமன், குகன் ஈ) சடாயு, இராமன்
7. வையகமும் வானகமும் ஆற்றலரிது - எதற்கு?
அ) செய்யாமல் செய்த உதவி ஆ) பயன்தூக்கார் செய்த உதவி
இ) தினைத்துணை நன்றி ஈ) காலத்தினால் செய்த நன்றி
8. 'குழிமாற்று' எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்?
அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை
9. வெண்பாவிற்குரிய ஓசை ______.
அ) செப்பலோசை ஆ) துள்ளலோசை இ) அகவலோசை இ) தூங்கலோசை
10. சுரதா நடத்திய கவிதை இதழ்
அ) ஊர்வலம் ஆ) விண்மீன் இ) இலக்கியம் ஈ) காவியம்
11. 'உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்' - இத்தொடர் உணர்த்தும் பண்பு
அ) முரண் பண்பு ஆ) நேர்மறைப் பண்பு
இ) எதிர்மறைப் பண்பு ஈ) இவை அனைத்தும்
12. உழா அது - என்பதன் இலக்கணக்குறிப்பு
அ) செய்யுளிசை அளபெடை ஆ) சொல்லிசை அளபெடை
இ) உவமைத்தொகை ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
13. Jurisdiction - என்பதன் தமிழ்ச்சொல்
அ) ஆணையுறுதி ஆவணம் ஆ) சாட்டுரை
இ) அதிகார எல்லை ஈ) வாதி

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

14. நெடுநல்வாடை ______ அடிகளைக் கொண்டது.

அ) 188 ஆ) 178 இ) 198 ஈ) 188

## பகுதி - II

### பிரிவு - 1

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக. 3 x 2 = 6

15. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' - விளக்கம் தருக.
16. நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது?
17. வசனம், கவிதை - வேறுபாடு தருக.
18. கவி விழா, ஒலி விழா - விளக்கம் தருக.

### பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக. 2 x 2 = 4

19. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.
20. சங்க காலத்தில் தாய் வழிச் சமூக முறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை?
21. சென்னையிலுள்ள நூலகங்களின் பெயர்களை எழுதுக.

### பிரிவு - 3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7 x 2 = 14

22. உவமைத் தொடர்களைச் சொற்றொடரில் அமைக்க.
    அ) உள்ளங்கை நெல்லிக்கனி போல ஆ) தாமரை இலை நீர் போல
23. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக: அலை, அளை, அழை
24. திருவளர்ச்செல்வன், திருவளர் செல்வன் - இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?
25. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.
    அ) விகாசினி பேச்சுத்திறன் யார் வெல்ல முடியும்.
    ஆ) காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும்.
26. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.
    அ) நான் கடுதண்ணீரில் குளித்தேன்.
    ஆ) மாணம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.
27. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க: வெங்காயம்
28. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக : ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவச் சொல
29. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
    அ) வியந்து ஆ) நினைக்கின்ற
30. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக : அ) இனநிரை ஆ) செல்லிடத்து

## பகுதி - III

### பிரிவு - 1

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 4 = 8

31. 'ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
32. வாடைக்காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?
33. "மூன்றான் காலம் போல் ஒன்று" - எவை? ஏன்? விளக்குக.
34. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

### பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 4 = 8

35. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.
36. தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்திற்குச் செய்யும் உதவிகள் யாவை?
37. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்.
38. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில் இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in



## பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3 x 4 = 12

39. நிரல்நிறை அணி அல்லது ஏகதேச உருவக அணியைச் சான்றுடன் விளக்குக.

40. பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

41. பின்வரும் பழமொழியை **வாழ்க்கை நிகழ்வில் பொருத்தி எழுதுக.**

அ) யானைக்கும் அடி சறுக்கும் **(அல்லது)** ஆ) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை

42. **இலக்கிய நயம் பாராட்டுக. (மையக்கருத்துடன் மூன்று நயங்கள் சுட்டுக)**

முச்சங்கம் கூட்டி
    முதுபுலவர் தமைக் கூட்டி
அச்சங்கத் துள்ளே
    அளப்பரிய பொருள் கூட்டி
சொற்சங்க மாகச்
    சுவைமிகுந்த கவி கூட்டி
அற்புதங்க ளெல்லாம்
    அமைந்த பெருமாட்டி !

- *கண்ணதாசன்*

43. **கீழ்கண்ட பத்தியைப் படித்துணர்ந்து அதிலுள்ள ஏதேனும் எட்டு ஆங்கிலச் சொற்களுக்கு தமிழாக்கத்தைத் தருக.**

In terms of human development objectives, education is an end in itself not just a mean to an end. Education is a basic human right. It is also the key which opens many economic, social and political doors for people. It increases access to income employment opportunities in life. Educating people is a worthy goal in itself, irrespective of the economic rates of return.

## பகுதி - IV

3 x 6 = 18

44. தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறைவாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.

45. குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே ஒரு மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு? விளக்குக.

**(அல்லது)**

"ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு" - நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக.

46. 'உரிமைத் தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால் ....... கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.

**(அல்லது)**

"சாலை விபத்தில்லா தமிழ்நாடு" - இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை?

## பகுதி - V

4 + 2 = 6

47. அடிபிறழாமல் **செயல் வடிவில் எழுதுக.**

அ) 'குகனோடும்.......' எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல்.

ஆ) 'மிகும்' என முடியும் குறள்.

******

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 73589655